தமிழ் நாடு சட்டப் பேரவை

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் கூடும் ஐந்தாவது சட்டப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர்.

வியாழக் கிழமை, 1971 அக்டோபர் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் அமைச்சர் திரு. கே. மாதவ மேனன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1947-ஆம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ் நாட்டின் அமைச்சராக இருந்த திரு. கே. மாதவ மேனன் அவர்கள் 1-9-1971 அன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை பிறந்த நாள்.

*1 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வ. உ. சிதம்பரம் பிள்ளை பிறந்த தினத்தை முன்னிட்டு அரசாங்க விடுமுறை விடும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மறைந்த மாமேதை வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தேச விடுதலைக்காக அயராது உழைத்ததன் காரணமாக அன்னாருடைய தியாகத்தை

முன்னிட்டாவது, அன்னாருடைய பிறந்த தினத்தை அரசாங்க விடு முறையாக அறிவிப்பது பற்றி அரசாங்கம் புனர்பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக, தேசியத் தலைவர்களுடைய பிறந்த தினங்கள் அரசு விடுமுறையாக இப்பொழுது அறிவிக்கப்படுவதில்லை. தேசத் தந்தை உத்தமர் காந்தியடிகள் பிறந்த தினத்தைத் தவிர வேறு யாருடைய பிறந்த தினமும்—நேரு அவர்கள் போன்றோருடைய பிறந்த தினம் கூட—அரசாங்க விடுமுறையாக அனுஷ்டிக்கப்படு வதில்லை. ஆனால், அவர்களுடைய நூறாவது பிறந்த தினத்தன்று மாத்திரம் விடுமுறை அளிக்கப்பட்டு, அது சிறப்பாகக் கொண்டா டப்படுகிறது. உதாரணமாக, கோபாலகிருஷ்ண கோகலே, தேச பந்து சித்தரஞ்சன் தாஸ் ஆகியோருடைய நூறாவது பிறந்த நாள் நினைவாக 9-5-1966 இலும், 5-11-1970 இலும் நூறாவது ஆண்டு நினை வாக பிறந்த தின விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே அனேகமாக அடுத்த ஆண்டு, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களுடைய நூறாவது பிறந்த நாளுக்கு தமிழக அரசின் சார்பில் விடுமுறை அளிப்பதற்கும், பொதுவாக இந்தியா முழு வதும் விடுமுறை அளிக்க மத்திய அரசுக்கு எழுதுவதற்கும் இந்த அரசு முடிவு எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, வ.உ.சி. போன்றவர்கள் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் இந்தியா பூராவுக் கும் பொதுவான தலைவர்கள் என்று அமைச்சரவர்கள் சொன்ன தைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இருப்பினுங்கூட, அவர்கள் வாழ்ந்த நெல்லை மாவட்டத்திற்கு ஒரு 'செக்ஷனல் ஹாலிடே' மாதிரியாவது அவருடைய பிறந்த தினத்தன்று ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களே சொன்னார்கள். அவர் அனைத் திந்தியத் தலைவர்கள் வரிசையில் இருக்கக் கூடியவர் என்று. ஆகவே, மாவட்ட அளவில் அவருடைய தலைமையைச் சுருக்க வேண்டும் என்று நான் கருதவில்லை.

குப்பமேட்டுப்பட்டி பள்ளிக் கட்டடம்.

* வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த குப்ப மேட்டுப்பட்டியில் பள்ளிக் கட்டடம் கட்ட அரசாங்கம் முழு மானி யத்தொகை அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

(உ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?